Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 30, 2023

வியாழக்கிழமை நவம்பர் 30, 2023 | ஒளி: 09 கதிர் 139 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பதில் பொலிஸ் மா அதிபர் நியமனம்

மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

அரசியல்வாதிகள் உட்பட முக்கிய தரப்பினரின்

# “உண்மை முகம் அம்பலமாகும்”



**சம்பிக்க தெரிவிப்பு: 70,000 கோடி ரூபாவை அரச வங்கிகள் அறவிட வேண்டியுள்ளது என்கிறார்**

அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை பெரும்பாலான அரசியல்வாதிகள் உட்பட முக்கிய தரப்பினர் திருப்பிச் செலுத்தவில்லை. இவ்வாறானவர்களிடமிருந்து 70,000 கோடி ரூபாவை அரச வங்கிகள் அறவிட வேண்டியுள்ளது என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் எதிர்க்கட்சி எம்.பியுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அஸ்வெசும கிடைக்காதோர் நீதிமன்றத்தை நாடினர்

பாலித ஆரியவங்ச

சமுர்த்தி நிவாரணம் கிடைத்துக்கொண்டிருக்கும் நிலையில், அஸ்வெசும கிடைக்காமல் போனவர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதுளை பிராந்திய தொடர்பாடல் அதிகாரியான க்ளோரி பிரான்ஸிடம், புதன்கிழமை (29) முறைப்பாடுகளைக் கையளித்துள்ளனர்.

இவ்வாறு முறைப்பாடு செய்தவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி பதுளை மாவட்ட காரியாலயத்தில் இருந்து, மனித உரிமைகள் காரியாலயத்துக்கு ஊர்வலமாக வந்து முறைப்பாடு செய்துள்ளனர். அங்கு 34 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள.

அஸ்வெசும கிடைக்காதவர்கள், பதுளை மாவட்டத்தில் மட்டும், 10 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன என்று சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி தேசிய சங்கத்தின் பிரதி தலைவர் பீ.ஏ.மஹிந்த சேன தெரிவித்தார்.

## “மாங்குளத்தில் முன்பதிவுக்கு ஏற்பாடு செய்க”

வடக்கு மாகாணத்தில் 7 இ.போ. சபைகள் உள்ளபோதும் நீண்டகாலமாக பிராந்திய முகாமையாளர் இல்லாத மாகாணமாக வடக்கு மாகாணம் உள்ளது. எனவே, நிரந்தர பிராந்திய முகாமையாளரை வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (29) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## 3.5 கி.கி. தங்கம் சிக்கியது: நால்வர் தப்பியோட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

நாட்டிலிருந்து படகு மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் ரூ.2.20 கோடி மதிப்பிலான 3.5 கிலோ கிராம் தங்கம், இந்தியாவின் பாம்பன் அருகே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், இந்தியா பாம்பன் அருகே சந்தேகத்துக்கு இடமான முறையில் புதன்கிழமை (29) அதிகாலை 4 மணியளவில் நாட்டுப் படகொன்று நின்றது.



படகில் இருந்து நான்கு பேரும் கரையை நோக்கி வரும்போது, மறைந்து இருந்த அதிகாரிகள் அவர்களை பிடிக்க முயன்றுள்ளனர். எனினும், தாங்கள் கொண்டு வந்த பொதியை படகிலேயே விட்டுவிட்டு, கடலில் குதித்து தப்பியுள்ளனர்.

கடலில் நிறுத்தப்பட்டிருந்த படகை சோதனையிட்டபோது, அதில் சுமார் 3.5 கிலோ கிராம் தங்க கட்டிகள் இருந்துள்ளன.

தொடர்ச்சி P2

## 4,415 முறைப்பாடுகளில் 2 ஐ விசாரித்துள்ளனர்

2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு 4,415 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் இரண்டு முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதாக சுதந்திர மக்கள் சபையின் தலைவரும், சுயாதீன எதிரணி எம்.பி.யுமான டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (29) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முறைப்பாடுகளை விசாரிப்பதில் பாரிய காலதாமதம் ஏற்பட்டுள்ளது. புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இந்த சட்டத்துக்கமை ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் எப்போது நியமிக்கப்படுவார்கள், எப்போது ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் என சபாநாயகரிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளிக்கும் போதே புதிய ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு அமைய இன்னும் இரண்டு வாரங்களுக்குள் ஆணைக் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள், ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் என்றார்.



## “மத்தளையினால் ரூ.200 கோடி நட்டம்”

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினால் ஒவ்வொரு வருடமும் 200 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்ட. து எனவே மத்தள விமான நிலையத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுக அபிவிருத்தி மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (29) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பி.யான லலித் எல்லாவல எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு

## மார்ச் முதலாம் திகதி ஆரம்பம்

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு- கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டன.

ஏற்கெனவே முதலாம் கட்டத்தில் 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில், இரண்டாம் கட்டம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை (28)வரையிலும் 39 மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன

இவ்வாறான நிலையில் முல்லைதீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக விசேட ஸ்கேன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

## போதகர் ஜெரோம் நாடு திரும்பினார்

சர்ச்சைக்குரிய ஞாயிறு பிரசங்கம் தொடர்பில் தம்மை கைது செய்ய வேண்டாம் என கடந்த வாரம் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை புதன்கிழமை (29) காலை வந்தடைந்தார்.

பௌத்தம், இஸ்லாம் மற்றும் இந்து மதங்களுக்கு எதிரான சர்ச்சைக்குரிய கருத்துக்களுக்காக, குற்றப்புலனாய்வு விசாரணைகளின் கீழ் இருந்த பெர்னாண்டோ, இந்த ஆண்டு மே மாதம் 15ஆம் திகதியன்று நாட்டை விட்டு வெளியேறினார்.

போதகர் ஜெரோம் தாக்கல் செய்த ரிட் மனுவை கடந்த வாரம் ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரை விமான நிலையத்திலோ அல்லது வேறு எங்கும் கைது செய்யக் கூடாது என்று பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையிலேயே, அவர், நாடு திரும்பியுள்ளார்.



## பருவச்சீட்டு குறைக்கப்படும் இன்றேல் கட்டணம் கூடும்

இ.போ.ச. பஸ்களில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவச்சீட்டு மூலம் நூற்றுக்கு 7 வீதமே அறவிடப்படுகிறது. இதற்காக போக்குவரத்து சபைக்கு 2 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தமுறை வரவு- செலவு திட்டத்தில் அந்த 2 பில்லியன் ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.





இதன் காரணமாக அடுத்த வருடம் மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவச்சீட்டு எண்ணிக்கை குறைக்கப்படும் அல்லது பருவச்சீட்டுக்கான கட்டணம் அதிகரிக்கப்படும் என ஜே.வி.பி. எம்.பி.யான விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘யாழ் ராணி’யை போல ஒன்றை ஆரம்பிக்கவும்

வடக்கு மாகாணத்தில் உள்ள கிராமங்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வரும் வகையில் 2022ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. இதனால் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.யும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (29) இடம்பெற்ற 2024



தொடர்ச்சி P2

## புலிகளின் சின்ன ரி-சேர்ட்: இளைஞனுக்கு விளக்கமறியல்

எம். றொசாந்த்

யாழில். விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் புலிகளின் தலைவரின் படம் பொறித்த ரி - சேர்ட் அணிந்த இளைஞனை எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் திங்கட்கிழமை (27) நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் கொடிகாமத்தை சேர்ந்த 27 வயது இளைஞன், புலிகளின் சின்னம் மற்றும் புலிகளின் தலைவரின் படம் பொறித்த ரி - சேர்ட் அணிந்தவாறு நிகழ்வில் கலந்து கொண்டார்.

அது குறித்த விசாரணைகளை முன்னெடுத்த இராணுவ புலனாய்வு பிரிவினர் , இளைஞனைக் கைது செய்து கொடிகாமம் பொலிஸாரிடம் செவ்வாய்க்கிழமை (28) ஒப்படைத்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் , பயங்கரவாத தடை சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்பு ஒழுங்கு விதிகளின் கீழ் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (29), முற்படுத்தினர்.

இளைஞனின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கேசவன் சயந்தன், இளைஞன் குற்ற மனப்பாங்குடன் அந்த செயலை செய்யவில்லை.

வினோதமான முறையில் செய்துள்ளார். இந்த செயலால் தேசிய பாதுகாப்புக்கு எந்த சவாலும் விடப்படவில்லை. குற்ற மனப்பாங்குடன் செய்யாத செயலுக்கு பயங்கரவாத தடை சட்டம் போன்ற கடுமையான சட்டங்களின் கீழ் இந்த வழக்கினை விசாரணை செய்ய கூடாது.

தொடர்ச்சி P2

புறக்கணிக்கப்பட்டவர்களுக்கே

# “பொய் வாக்குறுதி”



கொழும்பு மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 14,512 குடியிருப்புகள் மாத்திரமே உள்ளன. இந்நிலையில், 50,000 குடியிருப்புகளுக்கு ஜனாதிபதியினால் எவ்வாறு உறுதிப்பத்திரம் வழங்க முடியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான எஸ்.எம்.மரிக்கார் எனக் கேள்வி எழுப்பினார்.

மக்களால் புறக்கணிக்கப்பட்ட சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோருக்காகவே இந்த பொய் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. முடிந்தால் இவ்விருவரும் தேர்தலில் எம்முடன் போட்டிப் போட்டு வெற்றி பெற்றுக்காட்டட்டும் என்றும் சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (29) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள தொடர்மாடி குடியிருப்பில் உள்ள 50 ஆயிரம் குடியிருப்பாளர்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரம் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இது முற்றிலும் பொய்யானது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 50 ஆயிரம் குடியிருப்புகள் இல்லை. 14512 குடியிருப்புகள் மாத்திரமே உள்ளன. மீதுன்செவன குடியிருப்புத் திட்டத்தில் 500 குடியிருப்புகளும், லக்முது செவன குடியிருப்பு திட்டத்தில் 118 குடியிருப்புகளும், மெதத்செவன குடியிருப்புத் திட்டத்தில் 430 குடியிருப்புகளும் உள்ளடங்களாக 24 குடியிருப்பு செயற்திட்டத்தில் 14512 குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. இவ்வாறான நிலையில் ஜனாதிபதியினால் எவ்வாறு 50,000 குடியிருப்பாளர்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்க முடியும்?

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வழங்கியுள்ள குடியிருப்புகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்க முடியாது. ஏனெனில் உரிய காணிகளுக்கு முதல் உரிமையாளர் இல்லாத நிலையில், உறுதிப்பத்திரம் வழங்க முடியாது. இதுவே உண்மை.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு எம்மை விடவும் ஜனாதிபதி ரணில் விக்ரமநிங்கவே கடன்பட்டுள்ளார்.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை தொடர்ந்து அவர் ஏமாற்றினார். அதற்கான பாடத்தை கொழும்பு மாவட்ட மக்கள் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் கற்பித்தார்கள் என்றார்.

# துறவியான பிரபஞ்ச அழகி இலங்கைக்கு விஜயம்

பிரபஞ்ச அழகியாக முடிசூட்டப்பட்ட வியட்நாமை சேர்ந்த எலிசபெத் சுஜாதா, துறவு வாழ்க்கையில் நுழைந்து 15ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

துறவியாகுவதற்கு முன்பு, எலிசபெத் நான்கு முறை வியட்நாம் அழகியாக முடிசூட்டப்பட்டுள்ளதுடன், மிஸ் யுனிவர்ஸாகவும் பட்டம் பெற்றுள்ளார். பின்னர் வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து துறவு வாழ்க்கையில் நுழைந்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுஜாதா பிக்குனி, வரலாற்று வழிபாட்டுத் தலங்களைப் பார்வையிட்டுள்ளதுடன் மிஹிந்தலா ரஜமஹா விகாரைக்கு திங்கட்கிழமை (27) விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.



# வலையில் சிக்கி சிறுத்தை மரணம்

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா ப்ரௌன்ஸ்வீக் தேயிலை தோட்டப் பகுதியில் சிறுத்தையொன்று உயிரிழந்த நிலையில் புதன்கிழமை (29) அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுத்தையானது சுமார் 02 அடி 8 அங்குல உயரமும் 06 அடி நீளமும் கொண்டது எனவும் தேயிலைச் செடியின் உதவியுடன் வைக்கப்ப ட்டிருந்த கம்பி வலையில் சிக்கி சிறுத்தை உயிரிழந்துள்ளதாகவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுத்தை தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்



# யானை இடித்த சுவருக்குள் புதையுண்ட இளைஞன் மரணம்

காட்டு யானையொன்று வீட்டின் சுவரொன்றை இடித்துத் தள்ளியபோது, அவ்வீட்டின் அறையிலிருந்த இளைஞர்களில் 19 வயதான இளைஞன், சுவரின் இடிபாடுகளுக்குள் புதையுண்டு மரணமடைந்துள்ளார்.

இந்த சம்பவம், புதன்கிழமை (29) சிகிரியா கிபிஸ்ஸ பிரதேசத்திலுள்ள வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது.

சிகிரியா பிரதேசத்தில் விடுதி ஒன்றில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி பெற்றுவரும் சீகிரிய கிபிஸ்ஸ பகுதியைச் சேர்ந்த அவிந்த



இஷான் சமரநாயக்க என்பவரே உயிரிழந்துள்ளார்.

நெல்லை உண்ண வந்த காட்டு யானையே இவ்வாறு வீட்டின் சுவரை இடித்துத் தள்ளியுள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.





# ஒல்லாந்தர் கோட்டைக்கு ஆபிரிக்க உயர்ஸ்தானிகர் விஜயம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

சுமார் 400 வருடங்கள் பழமை வாய்ந்த, மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டைக்கு தென் ஆபிரிக்க நாட்டுக்கான உயர்ஸ்தானிகர் சாண்டிலே எட்வின் ஷால்க் (Sandile Edwin Schalk) விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக தவிசாளர் ஏ.பீ. மதன் வாசன் மற்றும் உயர்ஸ்தானிகரின் செயலாளர், ஆகியோர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோட்டை வளாகத்தைச் சுற்றிக்காட்டியுள்ளனர். அத்துடன், மாவட்டத்தின் வளங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

# கேரள கஞ்சாவுடன் குடும்ப பெண் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பேசாலை பகுதியில் கேரள கஞ்சாவுடன் பெண்ணொருவர் செவ்வாய்க்கிழமை (29) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்றை சோதனையிட்டபோது ஒரு கிலோ 30 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதனையடுத்தே குடும்பப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணுடன், கைப்பற்றப்பட்ட கஞ்சாவையும் மேலதிக விசாரணைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.



# பெறுபேறு தாள்களை போலியாக தயாரித்த நால்வர் சிக்கினர்

இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுத் தாள்களைப் போன்று போலியான தாள்களை தயாரித்த 25 மற்றும் 55 வயதுக்கும் இடைப்பட்ட நால்வரை கேகாலை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பைத்




தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நால்வரில் ஒருவர் போலி பரீட்சைத் தாள்களை தயாரித்தவர் என்றும் ஏனைய மூவரும் உதவிச் செய்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

> கணினி மற்றும் செப்பு சீல் உள்ளிட்ட பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்

இவர்கள், ஹக்கஹின்ன, ஹெட்டிமுல்ல மற்றும் அலபலவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த சோதனையின் போது, போலி பெறுபேற்றுத் தாள்கள், கணினி, மற்றும் செப்பு சீல் உள்ளிட்ட பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# கபரகொயா கடித்த மீனவரின் சடலம் மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மஹகும்புக்கடவல பகுதியில் உள்ள மோகரிய குளத்திலிருந்து செவ்வாய்க்கிழமை (28) மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஹகும்புக்கடவலையைச் சேர்ந்த திருமணமாகாத 51 வயதான தசாநாயக்க முதியன்சேலாகே சுனில் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளத்தில் வலையைக் கட்டி, மீன் பிடிக்கும் தொழிலை இடைக்கிடையே மேற்கொண்டு வரும் இவர், திங்கட்கிழமை (27) வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையிலேயே இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மோகரிய குளத்தில் சடலமொன்று மிதப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த

> மீனவரின் முகப் பகுதியை கபரகொயா எனும் நீர் உடும்பு உட்கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது

தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சடலத்தின் முகப் பகுதி சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாகவும், கபரகொயா எனும் நீர் உடும்பு (Asian water monitor) குறித்த மீனவரின் முகப் பகுதியை உட்கொண்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

# Loy Krathong நிகழ்வில் செந்தில் பங்கேற்பு

தாய்லாந்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற Loy Krathong நிகழ்வில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

தாய்லாந்து பாராளுமன்றத்தின் சபாநாயகர் வன்முஹமத்னூர் மாதா அழைப்பின் பேரில், பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்ற 2023 யிற்கான Loy Krathong நிகழ்வில் பங்கேற்றார்.

சபாநாயகர், செனட் தலைவர், இராஜதந்திரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு Loy Krathong வாழ்த்துகளை செந்தில் தொண்டமான் தெரிவித்தது கொண்டார்.



# தொழில் வாய்ப்பு சந்தைகளின் தேவையை உணர்த்தும் தேடல்

தொழில் துறைசார் வல்லுநர்கள், நிபுணர்கள், நாட்டை விட்டோடும் நிலைமைக்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. அவ்வாறானவர்கள் வெளிநாடுகளுக்குப் படையெடுத்தல் இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. இது, நாட்டின் எதிர்காலத்துக்கும், தொழில் துறைகளுக்கும் பாரிய அச்சுறுத்தலாகவே அமையும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.

தங்களுடைய ஊதியத்திலிருந்து அறவிடப்படும் வரி அதிகரிப்பை அடுத்தே, நிபுணர்களும், வல்லுநர்களும், நாட்டை விட்டோடிக்கொண்டிருக்கின்றனர். அரசாங்கத்தின் வருமானம் குறைந்துவரும் போது, அவற்றை ஈடுசெய்வதற்காக, அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் புதிய வரிகள் இன்றேல் வரி அதிகரிப்பு காரணமாக, சாதாரண மக்கள் முதல், நடுத்தர தொழில் புரிவோரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியதுறைகளைச் சேர்ந்தவர்களால் தங்களுடைய தொழிலுக்கு ஏற்றவகையில் ஊதியம் கிடைக்காமையால், அவ்வாறானவர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் வரிகளால், தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் தகவல்களின் பிரகாரம், இதுவரையிலும் சுமார் 40க்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளுக்குத் தேவையான வைத்தியர்கள், நிபுணர்கள் உள்ளிட்ட ஆளணி பற்றாக்குறை, வைத்திய சாலைகளுக்குத் தேவையான மருந்து தட்டுப்பாடுகள் உள்ளிட்டவை, வைத்தியசாலைகளை இழுத்து மூடப்படுவதற்குப் பிரதான காரணங்களாக அமைந்துள்ளன. இதனால், சாதாரண மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

மருந்து பொருட்களின் விலையேற்றத்தால், சாதாரண மருந்துகளைக்கூட குறைந்த விலைகளில் கொள்வனவு செய்துகொள்ள முடியாதுள்ளது. மற்றுபுரத்தில் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை பெற்றுக்கொள்ளமுடியவில்லை. பொருட்களின் விலைகளும் எகிறிக்கொண்டே செல்கின்றன.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அதிகாரிகளின் வழங்கப்படும் கல்சியம் மற்றும் வைட்டமின்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாகத் தாய்மார்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால், வைட்டமின்கள், கல்சியம், மருந்துகளை ஆகக் கூடுதலான விலையைக்கொடுத்து வெளியிலிருந்து வாங்க வேண்டிய நிலைமை தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, இரண்டொருவரின் வேலைகளை ஒருவரே செய்துமுடிக்க நிர்ப்பந்திக்கப்படுவதால், தொழில்களைத் தேடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இது நாட்டில் தொழில் இல்லாதவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கச் செய்துவிடும்.

ஆகையால், பெரும் நகரங்களுக்கு தொழில்களைத் தேடிப் படையெடுப்போரின் எண்ணிக்கை வழமையை விடவும் அதிகரித்துள்ளது. அவற்றை நிவர்த்திக்க வேண்டுமாயின், பிரதேச மட்டங்களில் தொழில் சந்தைகளை ஏற்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் வாழும் பிரதேசங்களில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். இல்லையேல் தொழில் இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதுவே, அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாய் மாறும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136


Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# சீன திட்டங்களை தமிழ்த் தேசிய கட்சிகள் ஏன் எதிர்க்க வேண்டும்?

அ.நிக்ஸன்

ரஷ்ய - சீனக் கூட்டை மையப்படுத்திய பிறிக்ஸ் நாடுகளின் மொத்த வர்த்தகத்தின் மதிப்பு ஒன்று தசம் பதினான் குரில்லியன் அமெரிக்க டொலர் என்று சர்வதேச நாணய நிதியத்தின் சென்ற ஓகஸ்ட் மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உள்ளடங்கலாகப் பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகளை மையப்படுத்தியே அறிக்கை வெளியாகியுள்ளது. இந்திய வர்த்தக முறைகளும் இந்தியாவின் பங்களிப்பும் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் பிரதானமானது எனவும் சீன, இந்திய வர்த்தகச் செயற்பாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் அதிகரித்த நிலையில் இருப்பதாகவும் புள்ளி விபரங்கள் காண்பிக்கின்றன.

இதன் காரணமாக பிறிக்ஸ் நாடுகள் உலகளவில் புறக்கணிக்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளதாக சின் ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் வர்த்தகப் பங்களிப்பு பற்றியும் இந்தச் செய்தி நிறுவனம் விபரிக்கிறது.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவுடன் சீனாவுக்குப் போட்டியில்லை. பிராந்தியத்துக்குச் சம்பந்தப்படாத அமெரிக்கா மாத்திரமே இப்போது சீனாவின் நேரடிப் போட்டியாளர் என்று சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான குளோபல் ரைம்ஸ் (global times) புவிசார் அரசியல் பொருளாதார விமர்சனங்கள் ஒவ்வொன்றிலும் கருத்துக்களை முன்வைத்து வருகிறது.

மேலும், சீனாவிற்கு இந்தியா செய்யும் ஏற்றுமதி கடந்த ஐந்து ஆண்டுகளில் இருபது சதவீதம் அதிகரித்துள்ளது. சீனாவில் இருக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் சுமார் நாற்பத்து ஐயாயிரம். அதில் இருபதாயிரம் மாணவர்கள்.

சீனாவில் இருந்து, அதிகப்படியான உரம், இரசாயனம், எதிர்ப்புச் சக்தி மருந்துகளை இந்தியா இறக்குமதி செய்கிறது.

அத்துடன், ஏழு இந்திய வங்கிகள் சீனாவில் கிளைகளைத் திறந்துள்ளன.

இந்திய சீன வர்த்தகத்தை மேம்படுத்த, சீனாவில் இருந்து இந்தியா செல்பவர்களுக்கு 2017இல் இருந்து இலத்திரனியல் அடையாள அட்டை (Electronic Business Cards) முறையை இந்தியா அறிமுகம் செய்துள்ளது.

இந்திய சீன வர்த்தகம் 2000ஆம் ஆண்டில் இருந்து மூன்று பில்லியன் டொலராக அதிகரித்து 2008இல் 52 பில்லியன் டொலர்களாகவும் 2011இல் 73.9 பில்லியன் டொலர்களாகவும் 2018இல் இருந்து 90 பில்லியன் டொலர்களாவும் உயர்வடைந்துள்ளது.

தற்போது இதன் எண்ணிக்கை இரண்டு மடங்குகளாக அதிகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஆகவே, சீனாவுடன் நல்லுறவுகளைப் பேணிக் கொண்டு இலங்கை, மியன்மார், மாலைதீவு போன்ற நாடுகளில் சீனா மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா ஏன் ஓரக் கண்ணால் பார்க்கிறது என்ற கேள்வி எழாமலில்லை.

சீன உதவிகள் என்பது இலங்கையின் உள்ளக விவகாரம் என்று இந்திய இராஜதந்திரிகள் அவ்வப்போது பட்டும் படாமலும் கூறியுமிருந்தனர். இரு நாடுகளுக்கிடையிலான உறவு என்று இப்போதும் அப்படித்தான் கூறி வருகின்றனர்.

இரண்டாயிரத்து முந்நூற்று முப்பது ஹெக்ரேயர் கடல் பரப்பை மூடி 2014இல் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு "போட் சிற்றி" திட்டம் கூட இந்தியாவின் பாதுகாப்புக்குப் பிரச்சினை இல்லை என்று இந்தியா அப்போது கூறியிருந்தது.

சீனாவிடம் இருந்து நிதியுதவி பெறுவதையோ இலங்கையில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியோ இந்தியா கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்று முன்னாள் பிரதமர் ரட்ண சிறி விக்ரமரட்ன 2010இல் நாடாளுமன்றத்தில் தெளிவாக எச்சரித்துமிருந்தார்.

இலங்கையில் சீனத் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிடுவதைவிட இந்தியத் திட்டங்களுக்கு மாத்திரமே சிங்கள அமைப்புகளும் பௌத்த குருமாரும் கடும் எதிர்ப்பு வெளியிடுகின்றன. சிங்கள அரசியல் தலைவர்களும் சீனாவுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியே இந்தியா அதிகளவு கவலை கொண்டுள்ளது போல் தெரிகிறது.

ஆனால் சீன - இந்திய வர்த்தகம் உலகில் முன்னணியாக இருக்கும் நிலையில், இலங்கைத்தீவில் அதுவும் வடக்கு, கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை மாத்திரம் இந்தியா விரும்பாமல் இருப்பதன் பின்னணி என்ன? எதிர்ப்பை நேரடியாக வெளிக்காட்டாமல் மறைமுகமாக அல்லது வேறு அழுத்தங்கள் மூலம் இந்தியா தனது விருப்பம் இன்மையை உணர்த்தி வருகிறது.

2009 மே மாதத்திற்கும் பின்னரான சூழலில் கடந்த பதினான்கு வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும்கூட ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்துக்கு நிரந்தத் தீர்வு ஏற்படாத ஒரு நிலையில், குறைந்தபட்சம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைக் கூட நடைமுறைப்படுத்த முடியாத ஒரு சூழலில் சீன அபிவிருத்திகளை இந்தியா விரும்ப மறுப்பதன் அடிப்படைக் காரண காரியங்கள் என்ன?

கொழும்பு "போட்சிற்றி" தொடர்பான பேச்சுக்கள் 2011இல் ஆரம்பித்து 2014இல் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோதுகூட இந்தியத் தேசியப் பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் இல்லை என்று மார்தட்டிய இந்தியா, தற்போது இந்தியத் தேசியப் பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தல் என்ற தொனியில் பேச ஆரம்பித்துள்ளது.

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய நிலையான தீர்வை ஏற்படுத்தினால் மாத்திரமே இந்தியாவுக்குப் பாதுகாப்பு என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் 2009இற்குப் பின்னரான சூழலில் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றன. சம்பந்தன் நாடாளுமன்ற உரையில் பகிரங்கமாக விபரித்துமிருக்கிறார்.

ஆனால் அது பற்றி இந்தியா கவனத்தில் எடுக்கவில்லை. போரில் தோல்வி கண்ட தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளின் கருத்துக்கள் முக்கியமானதல்ல என்ற பார்வையில் செயற்பட்டு சிங்கள ஆட்சியாளர்களை மாத்திரம் நம்பிச் செயற்பட்ட இந்தியா, தற்போது வடக்கு, கிழக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை ஏன் பின்கதவால் எதிர்க்க வேண்டும்?

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பாரம்பரியக் காணிகளை துண்டு துண்டாக்கி நிலத் தொடர்பற்ற தமிழ் சமூக மாற்றம் வேண்டும் என்ற நோக்கில் 1949இல் திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா திட்டத்தின் நோக்கங்கள் 2009இற்குப் பின்னரான சூழலில் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு "தமிழர் தாயகம்" என்ற கோட்பாட்டை உடைக்கவே அபிவிருத்தி என்ற போர்வையில் சீனாவுக்கு நிலங்கள் கையளிக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இலங்கை கையளித்துள்ள நிலங்கள், இயற்கைத் துறைமுகங்கள்கூட அதன் அடிப்படைதான்.

ஆகவே, தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் துண்டாடப்படும் என்ற நோக்கில் சீன அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா விரும்பவில்லையா? அல்லது தமிழர் பிரதேசங்களில் இந்தியாவின் புவிசார் அரசியல் பொருளாதார நோக்கங்களுக்கு அது ஆபத்து என்ற நோக்கிலா?

2009இற்குப் பின்னரான சூழலில் இருந்து இன்று வரையும் தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல் திட்டங்களை இந்தியா ஏன் எதிர்க்கவில்லை? கண்டிக்கவில்லை?

ஆகவே, எந்த எதிரி நாடென்றாலும் தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முன் வந்தால் நல்லது என்ற "ஒற்றைச் சிந்தனை" மாத்திரம் தற்போது தமிழ் மக்களிடம் உருவாக்கக் கூடிய பரிதாபகரமான நிலைமை உண்டு.

ஏனெனில் 2009இல் போருக்கு ஒத்துழைத்த அமெரிக்க இந்திய அரசுகளும் சீனாவும் சிங்கள தலைவர்களுடன் மாத்திரம் பேச்சு நடத்தும் நிலையில் கொழும்பின் அனுமதி ஊடக வரும் அபிவிருத்தித் திட்டங்களைத் தமிழர்கள் எதிர்க்க வேண்டும் என எந்த வல்லரசு நாடுகளும் எதிர்பார்க்கவே முடியாது.

தமிழ் ஈழம் அமைந்தால் அதனை முதலில் எதிர்ப்பது சீனாதான் என்று 1979 இல் கொழும்பிலிருந்த சீனத் தூதுவர், பேராசிரியர் வில்சனிடம் அப்போது கூறியிருந்தார். இது பற்றிய காரண காரியங்களை அரசியல் - இராணுவ ஆய்வாளர் டி சிவராம் 2003 இல் வீரகேசரி ஞாயிறு வார இதழில் விபரித்திருந்தார்.

ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்டத்தை இந்தியா ஆதரித்திருக்கும். ஆனால் "ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை" என்பதை அங்கீகரிக்க முடியாதென அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி 1983இல் தன்னிடம் கூறியதாகக் கவிஞர் புலமைப் பித்தன் 2008இல் வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெளிவாக விளக்கியுள்ளார். ஆகவே 1979இல் தமிழ் ஈழம் என்பதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த சீனா 2009இற்குப் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் தனக்குரிய புவிசார் அரசியல் தேவைகளை நிறைவேற்றுகிறது என்பது பகிரங்கம்.

எனவே ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை உணர்வுகளை அமெரிக்க - இந்திய அரசுகள் புரிந்துகொள்ளும் வரை தமிழ்த் தேசியக் கட்சிகள் சீன அபிவிருத்தி திட்டங்களை எதிர்க்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் சுயமரியாதையோடு நின்று பிடிக்கக்கூடிய அரசியல் தலைமை ஒன்று உருவாக வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

உங்கள் உயிர் எவ்வளவு உயர்வானது என்பது, உங்களுக்கு ஏற்படும் இன்பம், துன்பம் என்பவற்றைப் பொறுத்துத்தான் உணர்வீர்கள். நோய்கள் திடீரென ஒருவரைப் பற்றிக்கொண்டால், அவருக்கு உயிர் பயம் வந்துவிடுகின்றது. உளறிப் பிதற்றி அழுகின்றார்.

"இறைவா! என்னைக் காப்பாற்றிக் கொள்" என, இறைவனிடம் வேண்டுகோள் விடுக்கின்றார். சாதாரண நிலையில், தன்னிடத்தில் இருக்கும் 'உயிர்' என்ற ஒன்று குறித்த எண்ணம் எவருக்குமே தோன்றுவதில்லை.

அதேபோல்தான், மனிதனுக்கு எதிர்பாராத வகையில் செல்வம் வந்துவிட்டால், தன்னிலை மறந்துவிடுகின்றார். ஆத்மா, கடவுள், நன்மையான செயல்கள் குறித்துச் சிந்திப்பதும் இல்லை. நல்ல வழியில் சிந்திக்கும் எண்ணங்களையே மறந்து, ஆணவம், அதிகாரம், திமிர் போன்றவற்றுக்குள் சிக்குண்டு விடுகின்றார். சாதாரண மாற்றங்களே, மக்களை 'கண்மண்' எதுவெனத் தெரியாத வகையில் மாற்றி விடுகின்றன.

உண்மை எது, பொய் எது என மனிதர்கள் சிந்திப்பதற்குத் தங்களது நேரங்களை ஒதுக்குவதில்லை. ஆனால், துன்பங்கள் சூழ்ந்தால் மட்டும் ஞானம் வந்துவிடுகின்றது. இந்நிலையில், இன்பம் மீண்டும் வந்ததும் தன்னை மாற்றிக் கொள்கின்றான். கடவுளுக்கே பொய் சொல்வது, பலருக்குரிய குணமாக இருக்கின்றது.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆபத்து, ஆபத்து



ஹட்டன்- பொகவந்தலாவை பிரதான வீதியில், டிக்கோயா, கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பிரதான வீதியில் பாரிய மரங்கள் மற்றும் மூங்கில்கள் வளர்ந்து வீதியை நோக்கியவாறு வளைந்து உள்ளன.

இங்கு நிலவும் பாதுகாப்பற்ற நிலை மற்றும் உயிருக்கு ஆபத்து தொடர்பில் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் பல வருடங்களாக, பல தடவைகள் தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழுள்ள வீதியோரங்களில் வளர்ந்து வளைந்திருக்கும் மரங்கள் மற்றும் மூங்கில்களை அப்பகுதியில் இருந்து வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் அந்த வீதியோரங்களில் மழை மற்றும் கோடை காலத்தில் நிற்பதற்கும் நிழற்குடைகள் அமைத்து கொடுக்க நோர்வூட் பிரதேச சபை, நோர்வூட் பிரதேச செயலகம் மற்றும் ஹட்டன் நகர சபை முன் வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செ.தி.பெருமாள்



(நேற்றைய தொடர்ச்சி...)

## திருகோணமலையில்

# புதிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

எஸ்.கீதபொன்கலன்

தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது . அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும்.

கோமரன்கடவல சிவன் கோயில் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்தொடரால் தெரிகின்றது.

காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திறகும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்கசோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களை கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர்களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும், காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும், விளக்கங்ளும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.

முதலில் 'ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாயநாரை' என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி 'ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை' எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமானதென எடுத்துக்கொண்டுள்ளார்.

இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு 'ஸ்வயம்பு' என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதினால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும்.



**காலிங்கராயன் சொற்படி இக்கல்வெட்டை பொறித்தி இருக்கிறார்கள்**

**தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் இக்கல்வெட்டு முக்கியத்துவம் வாய்ந்தது**

**கல்வெட்டில் வரும் 'மாநாமத்துநாடு' என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம்**

**குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டை படியெடுக்க வேண்டியிருந்தது**

மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை 'லச்சிகாமபுரம்' என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார்.

இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர (வாவி சார்ந்த) என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தாகும்.

பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் 'மாநாமத்துநாடு' என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார்.

இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

இக்கல்வெட்டில் 'பற்று' என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார்.

பற்று என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் 'பத்து' என அழைக்கப்படுகின்றது.

இச்சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களிலும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டை படியெடுக்க வேண்டியிருந்தது.

ஆயினும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்க வேண்டியிருப்பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும் என்றும் பேராசிரியர் புஸ்பரெட்னம் கூறியுள்ளார்.

(முற்றும்)



## இலங்கை ஊடகவியலாளர் ப்ரெடி கமகே

# திமோர் - லெஸ்ட்டே விருது பெற்றார்

இலங்கையின் ஊடகவியலாளரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ஃப்ரெடி கமகேவுக்கு, கிழக்குத் தீமோர் நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ரமோஸ் ஹோர்டாவினால் திமோர் லெஸ்டே எனும் கௌரவம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

கிழக்குத் தீமோரின் சுதந்திரத்திற்கான பிரசாரத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பை பாராட்டும் முகமாக இந்தக் கௌரவம் அமைந்துள்ளது.

வேறொரு நாட்டின் பத்திரிகையாளர் ஒருவர் கிழக்கு திமோரின் தலைநகரில் பாராட்டப்படுவது இதுவே முதல் தடவையாகும். இது சமூக நீதிக்காக இடைவிடாத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ப்ரெடி கமகேவுக்கு மட்டுமின்றி, இதுபோன்ற பலருக்கும் கிடைத்த சிறப்பு மரியாதையாக இது கருதப்படுகிறது.

கமகே 1988-89இல் தனது உயிருக்கு அச்சுறுத்தல் காரணமாக பிலிப்பைன்ஸில் அரசியல் தஞ்சம் கோரியபோது திமோர் - லெஸ்டேவின் சுதந்திரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

1979- 81 காலப்பகுதியில், நீர்கொழும்பு புனித மரியாள் உயர்தரப் பாடசாலையில் உயர்தரப் பாடசாலை மாணவனாக இருந்தபோது, வணக்கத்திற்குரிய சரத் இத்தமல்கொடவுடன் கைகோர்த்து நீர்கொழும்பு சனசமூக நிலையத்தை நிறுவி அதனை முன்னெடுத்துச் சென்றார். தனது பள்ளி வாழ்க்கையில் கூட, தாழ்த்தப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்காக தனது நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டார்.

வாக்காளர் உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்ட ப்ரெடி, வெளிவாரியாக இளங்கலைப் பட்டதாரியானார். அத்துடன், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேசக் கற்கைகள் நிறுவகத்தில் சர்வதேச உறவுகளுக்கான உயர் டிப்ளோமாவும் பெற்றார்.

கொள்கைப் பிரச்சினைகளின் அடிப்படையில் ஜனவபோத கேந்திரா என்ற நிறுவனத்தில் முழுநேர சேவையில் இருந்து விலகிய போதும் மக்கள் போராட்டத்தை பிரேடி கைவிடவில்லை. அதன் பின்னர், "மூன்றாம் உலக நண்பர்கள்" என்ற அமைப்பை உருவாக்கி பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டார்.

இதன் காரணமாக, அவர் மரண அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.



88-89 பயங்கரவாதச் சூழல் காரணமாக தனது உயிரைக் காப்பாற்ற அரசியல் அகதியாக பிலிப்பைன்ஸில் வாழ வேண்டியிருந்தது.

அந்தக் காலகட்டத்தில்தான் கிழக்குத் திமோரின் சுதந்திரப் போராட்டத்தில் அதிக பங்களிப்பை வழங்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பின்னர் இலங்கை வந்த அவர் நீதிக்கான போராட்டத்தைத் தொடர்ந்தார்.

இதன் காரணமாக, ஒருமுறை பிலிப்பைன்ஸில் உள்ள மணிலா விமான நிலையத்தில் அவர் நாட்டுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு, அதிகாரிகளால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இந்த நிலையில், விமான நிலையத்தில் போராட்டம் நடத்த பிரட்டி அஞ்சவில்லை. இது குறித்து தேசிய நாளிதழ்களில் பல புகைப்பட அறிக்கைகள் வெளியாகியிருந்தன.

நீர்கொழும்பை மையமாகக் கொண்ட உள்ளூர் செய்தித்தாளான "மீபுரா" வைத் தொடங்கி, மிகக் குறைந்த வசதிகளின் கீழ் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக மாற்றுவதற்கு உழைத்தார். இன்றும் மீபுர இணையத்தளம் ஒரு தனிப் பாத்திரத்தை வகிக்கிறது.



நீர்கொழும்பு போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் ஊழல் அரசியல்வாதிகளின் உண்மை முகத்தை உலகுக்கு அம்பலப்படுத்துவதற்கு பிரேடியைப் போல் கடுமையாக உழைத்த சிவில் சமூக ஆர்வலர் மற்றும் ஊடகவியலாளர் வேறு எவரும் இல்லை. இதன் காரணமாக, நீர்கொழும்பின் குண்டர் அரசியலுக்கு அவர் பலியாகி வைத்தியசாலையில் கூட செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அவர் தனது போராட்டத்தை கைவிடவில்லை.

ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில், கமகே 'மீபுர' பிராந்திய பத்திரிகையினை தேசிய தரத்துக்கு உயர்த்துவதில் முக்கிய பங்காற்றினார். இன்றும் அது இணைய வடிவில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், தொழில்முறை வலை ஊடகவியலாளர்கள் சங்கத்தை நிறுவியவர் மற்றும் இணைய ஊடகத்திற்கான நெறிமுறைகளை அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

– அதிரன்

# எதிர்காலத்தை கொய்யும் சமூகம்



இராசதுரை கீர்த்தனா
நான்காம் வருடம்,
அரசறிவியல்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இன்றைய சிறுவர்கள் நாளைய உலகை வழிநடத்தி ஆட்சி செய்பவர்கள். அதனால் தான் ஒவ்வொரு குழந்தையையும் நல்லநிலையில் வளர்த்தெடுத்து நாட்டிற்கும், உலகிற்கும் ஒப்படைக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தவிர்க்க முடியாத பொறுப்பாகின்றது. ஆனால், இன்றைய சிறுவர்கள் பல்வேறு வகையில் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனால் சிறுவர் துஷ்பிரயோகம் உலகம் முழுவதிலுமே வியாபித்து உள்ளது.

சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு என்பவற்றுக்கென சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்றும் நூறு வீதம் இவை தவிர்க்க முடியாதவையாகவே காணப்படுகின்றன. நாடு முழுவதும் இருந்து தினந்தோறும் வெளியாகும் செய்திகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாகப் பயமுறுத்தும் அதிர்வெண்ணுடன் காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

சிறுவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்குபவர்களின் நடவடிக்கைகள் அவர்களின் அசட்டையான செயற்பாடுகளினால் சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் விருத்தி போன்றவற்றினை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதித்தலும், சிறுவர்கள் தேவையற்ற துன்பங்களுக்கும் உள்ளாகுதல் சிறுவர் துஷ்பிரயோகம் எனலாம்.

மேலும் தனிநபர்கள், நிறுவனங்கள் அல்லது பணிபுரியும் உத்தியோகஸ்தர்கள் போன்ற ஏதாவது ஓர் விடயம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சிறுவர்களுக்குத் தீங்கினை ஏற்படுத்துமாயின் அல்லது சிறுவர்களின் பாதுகாப்பு ஆரோக்கிய அபிவிருத்தி என்பவற்றைப் பாதிப்படையச் செய்யுமாயின் அதனைச் சிறுவர் துஷ்பிரயோகம் எனலாம்.

சமகால உலகில் சிறுவர்களைக் கடத்தல், யாசகம் பெறச்செய்தல், தொழிலுக்கு அமர்த்தல், கல்வியை இடைநிறுத்தல், கொடுமைப்படுத்தல், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தல், பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், சட்டபூர்வமான பாதுகாவலரிடம் இருந்து சிறுவர்களைக் கடத்தல், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தல், பாலியல் உறவுக்குத் தொடர்புகளைப் பெறுவதற்கு தூதாகச் சிறுவர்களைப் பயன்படுத்தல், சிறுவர்களைக் கவனிக்காமை, 16 வயதுக்குக் குறைந்த சிறுமியை விபசாரத்துக்கு பயன்படுத்தல் என பல்வேறு வகையான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன.

சமூகம் இப்பிரச்சினை தொடர்பில் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து சிறுவர்களுக்கு அறிவூட்டப்படாத, எச்சரிக்கை செய்யப்படாத அவலநிலை இன்றுவரை தொடர்கிறது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் தகுந்த இடத்திற்கு முறைப்பாடு செய்யப்படாததோடு, பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கவனிப்பையும், அரவணைப்பினையும் பெற்றுக் கொள்ளாமை மீண்டும் பாதாளத்துக்குள் தள்ளப்படுவதற்கே வழிவகுக்கின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பானது பிள்ளையின் உடல், உள மற்றும் அறிவுசார் வளர்ச்சியில் நீண்டகாலத் தாக்கத்தினை ஏற்படுத்த முடியுமானதாகக் காணப்படுகின்றன. குழந்தைப் பருவத்தில் பெற்றுக்கொள்கின்ற அனுபவங்களே ஒரு பிள்ளையின் அறிவு. உணர்வு மற்றும் ஆளுமைக்கு வேண்டிய அத்திவாரத்தை அமைத்துக் கொடுக்கின்றன. இவ்வாறான அனுபவங்கள் அடிப்படையிலேயே எதிர்மறையாக விரும்பத்தகாத விதத்தில் இருக்குமிடத்து பிள்ளைகளுக்கு உணர்ச்சி ரீதியான, நடத்தை ரீதியான மற்றும் கற்றல் சார் பிரச்சினைகள் ஏற்படக்கூடியதாக இருப்பின் அவர்களின் வாழ்நாள் பூராகவும் பாதிப்பு ஏற்படும் அபாயம் நேரிடும். எனவே, பிள்ளைகளின் வளர்ச்சிக் கட்டங்களை அறிந்து அவர்களின் தேவைகளை முழுமையாக அறிந்து அதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து சிறுவர்களுக்கும் உயிர்வாழ்வதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், சுதந்திரமாக இருப்பதற்கும், போதுமான கவனிப்பைப் பெறுவதற்கும், பாதுகாப்பான சூழலில் வளர்வதற்கும், கல்வியை பெறுவதற்கும் உரிமை உண்டு. எனினும் அந்த உரிமைகள் மீறப்படுவதில் சமூகம் மற்றும் சட்டம் ஆகிய இரண்டும் தொடர்புபடுகின்றன. வறுமை, மது, போதைப்பொருள், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் விரக்தி போன்ற சமூகக் காரணிகள் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. அதன் அடிப்படையில் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் என்பது சமூகத்தில் பொதுவான விடயமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

## சிறுவர் துஷ்பிரயோகத்தின் வடிவங்கள்

சிறுவர் துஷ்பிரயோகமானது உடலியல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம் எனப் பல வடிவங்களில் இடம்பெற்றுவருகின்றது. அடித்தல், காயப்படுத்தல், கடத்திச் செல்லல், அங்கங்களைச் சிதைத்தல், கொலை செய்தல் போன்றவற்றின் மூலம் நிகழக்கூடியவை உடலியல் ரீதியான துஷ்பிரயோகமாகக் கருதப்படும். இது பெரும்பாலும் பெற்றோர்களினாலும், ஆசிரியர்களினாலும், பாதுகாவலர்களினாலும், அவர்களின் எதிரிகளினாலும் ஏற்படுகிறது.

பொதுவாக சிறுவர்கள் சுயமாக விளையாடுதல், கற்றல், நாளாந்த கருமங்களைச் செய்தல், ஒளிவு மறைவின்றிப் பேசுதல், விருப்பங்களை வெளிப்படுத்துதல், அறியாத விடயங்களை அறிந்துகொள்ள முயலுதல், சுயமாகச் சிந்தித்தல், ஆராய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது அவை பலவந்தமாகத் தடுக்கப்படுமிடத்து, உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகுவார்கள். இதனால் அவர்களின் ஆற்றல், ஆளுமை, திறன், நுண்ணறிவு போன்ற உளநிலைகள் பாதிப்படையும். இது உளவியல் ரீதியான துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படுகிறது. அநேக பெற்றோர்கள் தமது ஆசைகளைப் பலவந்தமாகப் பிள்ளைகளின் உள்ளத்தில் திணிக்க முற்படுவதே இத்தகைய துஷ்பிரயோகம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணியாக அமைகின்றது.

பாலியல் துஷ்பிரயோகம் என்பது பாலியல் இச்சைக்காக சிறுவர்களைப் பயன்படுத்துவது மாத்திரமின்றி சிறுவர்களை முறையற்ற விதத்தில் தொடுதல், வருடுதல், பொருத்தமற்ற பாலியல் சொற்களைப் பயன்படுத்துதல், பாலியல் தொந்தரவுகளைக் கொடுத்தல், பாலியல் செயற்பாடுகளைப் பார்ப்பதில் ஈடுபடுத்தல், ஆபாசப் படங்கள், புத்தகங்களைப் பார்க்கச் செய்தல் போன்ற செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடச் செய்வதானது பாலியல் ரீதியான சிறுவர் துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படுகிறது. இவைகள் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும், தமது பொறுப்பு தாரிகளினதும் கண்காணிப்பை விட்டும் குறித்த சிறுவன் விலகும் போதும், தீய நண்பர்களுடன் சேரும் போதும் ஏற்படுகிறது. சில சமயங்களில் அதிகமான பாலியல் துஷ்பிர யோகங்கள் நெருங்கிய உறவினர்கள் மூலமாகவே ஏற்படுவதாக சமூகவியல் புள்ளிவிவர அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.



(நாளை தொடரும்...)



### மரணப்போராட்டத்தை முடித்த

# "எலி வளை"

உத்தரகாண்டில் உத்தரகாசி நகரில் சில்கியாரா பகுதியில் சுரங்கத்தில் வேலை செய்து வந்த 41 தொழிலாளர்கள் கடந்த 12ஆம் திகதி சுரங்க இடிபாடுகளில் சிக்கி கொண்டனர். அவர்களை வெளியே கொண்டு வரும் மீட்பு பணியில் அரசு ஈடுபட்டு வந்தது.

அனைவரும், நவம்பர் 28ஆம் திகதியன்று 8 மணியளவில் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

சுரங்கத்தில் இருந்து வெளியே கொண்டு வரும் முயற்சியின்போது, சுரங்கம் திடீரென இடிந்து விழுவதும், அதனால் மீட்பு பணியில் தாமதம் ஏற்படுவதும் தொடர்ந்து வந்தது. சுரங்கத்தின் நுழைவு பகுதி வழியே, பல மீட்டர் நீள குழாயை செலுத்தி அதன்மூலம் தொழிலாளர்களை மீட்கும் பணி நடந்தது. மொத்தமுள்ள 57 மீட்டர்கள் தொலைவை அடைய கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செங்குத்தாக துளையிடும் பணி முடிவடைந்ததும், தொழிலாளர்களை பத்திரமாக மீட்டு வர வசதியாக நீண்ட குழாயும் பதிக்கப்பட்டுவிட்டது. இதனால், 17 நாட்களாக இரவு பகலாக நீண்ட மீட்புப் பணிகள் நிறைவுக்கட்டத்தை எட்டியது.

முதலில் ஒருவர் பத்திரமாக மீட்டு வெளியே அழைத்து வரப்பட்டார். அடுத்த சிறிது நேரத்திலேயே ஒருவர் பின் ஒருவராக 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தால் கடந்த 2014ஆம் ஆண்டிலேயே தடை செய்யப்பட்ட எலி வளை நடைமுறை உத்தரகாண்ட் மீட்பு பணியில் தொழிலாளர்களை மீட்கும் பணிக்கு பெரும் பங்காற்றியுள்ளது.

உத்தரகாண்டில் சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்கள் 41 பேரையும் மீட்கும் பணியில் பெரும் பங்காற்றினர் எலி வளை தொழிலாளர்கள் எனப்படும் சுரங்க தொழிலில் கை தேர்ந்த ஊழியர்கள். இயந்திர கோளாறு ஏற்பட்ட பிறகு சுரங்கத்திற்குள் கைகளால் சுரங்கம் தோண்டி உள்ளே சென்று மீட்பு பணிகளை "எலிவளை தொழிலாளர்கள்" செய்துள்ளனர். குழாய்களை அமைத்து உள்ளே சென்று மீட்பு பணிகளை செய்துள்ளனர்.

இவை அனைத்தும் கைகள் மூலமே செய்துள்ளனர். எலி வளை என்று சொல்லப்படும் இந்த பணிக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் கடந்த 2014ஆம் ஆண்டு தடை விதித்தது. இது அறிவியல் பூர்வமானது அல்ல எனக் கூறி தடை செய்தது. இந்த முறையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. எலி வளை முறை பொதுவாக நிலக்கரி எடுக்க செய்யும் முறை ஆகும். அதாவது சுரங்கம் உள்ளே கைகளால் தோண்டுவார்கள்.

மலை வாழ் மக்கள்:

தோண்டத் தோண்ட துளை பெரிதானதும் அதில் குழாய் அமைப்பார்கள். குழாய் என்பது அதிகபட்சம் 4 அடி கூட இருக்காது. குழாய் அமைத்து உள்ளே சென்றதும் அங்கே இருக்கும் நிலக்கரியை எடுப்பார்கள். அதன்பின் கிடைமட்டமாக இன்னொரு சுரங்கம் போல தோண்டி. வெளியே வாகனங்கள் இருக்கும் பகுதியில் நிலக்கரியை கொட்டுவார்கள். அதாவது உள்ளே சென்று நிலக்கரியை எடுத்து அதை கிடைமட்டாக வேறு சுரங்கம் தோண்டி வெளியேற்றுவார்கள். இவர்கள் பொதுவாக இமயமலை தொடரில் வாழும் மலை வாழ் மக்கள்தான். இவர்கள் கைகளால் தோண்டி தோண்டி துளை போட்டு அதில் குழாய் போடுவார்கள். போகப் போக கூடுதல் குழாய்களை அமைத்து பாதை ஏற்படுத்துவார்கள். 4 அடி கொண்ட குழாய்கள் ஆகும். இதே முறையை பயன்படுத்தித்தான் இங்கே பாதையை ஏற்படுத்தினார்கள். இவர்கள் குழந்தை தொழிலாளர்களைப் பயன்படுத்தி வந்ததால் தடை செய்யப்பட்டு விட்டனர்.

நிலக்கரி சுரங்கங்களில், வட கிழக்கு மாநிலங்களில் இதற்குத் தடைகள் உள்ளது. எனினும் இந்தத் தடையை நீக்கக் கோரி தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மணிப்பூர் அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. சட்ட விரோதம் என்று தடை செய்யப்பட்ட இந்த முறை தான் உத்தரகாண்டில் சுரங்க தொழிலாளர்கள் மீட்கப் பெரிதும் கை கொடுத்துள்ளது. தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்ட பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் சையது அடா ஹஸ்னைன் (ஓய்வு) என்பவரிடம் இது குறித்து செய்தியாளர்கள் கேட்டனர். இதற்குப் பதிலளித்த ஹஸ்னைன், எலி வளை சுரங்க டெக்னிக் என்பது தடை செய்யப்பட்டதாக இருக்கலாம். ஆனால், எலி வளை தொழிலாளர்களின் திறமை மற்றும் அனுபவம் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது" என்றார். எலி வளை சுரங்கப் பணி என்பது நிலக்கரி சுரங்கங்களில் முன்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. "எலி வளை" சுரங்கம் வழியாகச் செல்லும் தொழிலாளர்கள் கைகளால் சிறிய உபகரணங்களைப் பயன்படுத்தியே நிலக்கரியை வெட்டி எடுப்பார்கள்.

பெரும் திருப்பு முனை:

உத்தரகாண்டில் இயந்திரங்கள் பழுது காரணமாக மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்ட நிலையில், எலி வளை சுரங்க தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள்தான் மிகவும் சவாலான அந்த சுரங்கப்பகுதிக்குள் இடிபாடுகளை மண்வெட்டி உள்ளிட்டவற்றால் அகற்றினர். சில மீட்டர் தொலைவுக்கே இந்த பணியாளர்கள் தோண்டினாலும் மீட்புப் பணியில் பெரும் திருப்பு முனையை இவர்களின் பணியே கொடுத்தது.



## யார் இந்த அர்னால்ட் டிக்ஸ்?



17 நாட்கள் பெரும் போராட்டத்துக்குப் பின் உத்தராகண்ட் மாநிலத்தின் சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் செவ்வாய்க்கிழமை (29) மீட்கப்பட்டனர். இந்த அபார மீட்புப் பணியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த ஏராளமான மீட்புக் குழுவினர் ஈடுப்பட்டிருந்தனர். அதில் ஒருவர்தான் சர்வதேச சுரங்க நிபுணர் அர்னால்ட் டிக்ஸ்.

யார் இந்த அர்னால்ட் டிக்ஸ்?

பேராசிரியர் அர்னால்ட் டிக்ஸ் சுவிட்சர்லாந்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சர்வதேச சுரங்கப்பாதை மற்றும் நிலத்தடி கூட்டமைப்பின் தலைவர். கட்டுமான ஆபத்துகள், பாதுகாப்பு செயல்திறன் தொடர்பான தொழில்நுட்ப சிக்கல்கள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். மேலும், நிலத்தடி கட்டுமானங்கள் தொடர்பான அபாயங்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்கி வரும் டிக்ஸ், உலகின் முன்னணி நிலத்தடி சுரங்கப்பாதை நிபுணராக அறியப்படுகிறார். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பொறியியல், புவியியல், இடர் மேலாண்மை ஆகிய துறைகளில் டிக்ஸ் கவனம் செலுத்தி வருகிறார்.

அண்டர்கிரவுண்ட் ஒர்க்ஸ் சேம்பர்ஸ் அமைப்பின் உறுப்பினராகவும் டிக்ஸ் இருந்து வருகிறார். இந்த அமைப்பு நிலத்தடி பணிகள், வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் ஆகியவற்றில் ஏற்படும் சிக்கலான அபாயங்களை கண்டறிந்து தீர்க்கும் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட குழுவாகும்.

சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்களை மீட்பதற்கு உதவ, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அர்னால்ட் டிக்ஸ் கடந்த நவம்பர் 20ஆம் தேதி அழைக்கப்பட்டார். நேற்று செய்தியாளர்களிடம் பேசிய டிக்ஸ், "ஆரம்பத்தில், இது விரைவாக நடக்கும் என்று நான் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை, இது எளிதாக இருக்கும் என்று நான் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை, அது நாளை நடக்கும் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. இன்றிரவு என்று கூறவில்லை. அவர்கள் கிறிஸ்துமஸ்க்கு வீட்டில் இருப்பார்கள், பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நான் சொன்னேன்" என்றார்.

## விபஸ்ஸனா தியான பயிற்சியின்

# அனுபவப் பகிர்வுகள்

பிருந்தாவதனி இராசையா

நான்கு வெவ்வேறு நிறங்களிலான பறவைக் கூட்டம் தன்னிடம் பறந்து வந்து பின்னர் எல்லாம் வெள்ளை நிறத்திற்கு மாறி செல்கின்ற புத்தரின் கனவு கடந்தக் காலங்களில் பலமுறை மெய்ப்பட்டிருக்கிறது. இம்முறை அது இலங்கையிலுள்ள தம்ம ஷோபா விபஸ்ஸனா தியான மையத்தில் நடைபெற்றது. இலங்கை மற்றும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் ஆண்களும் பெண்களும் இதில் கலந்துக் கொண்டனர்.

சாயாஜி உ பா கின்னின் பாரம்பரியத்தில் எச். என் கோயங்காவினால் பயிற்றுவிக்கப்படும் பத்து நாள் விபஸ்ஸனா பயிற்சி முகாம் காலி கொஸ்கமவில் ஒருங்கிணைக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியில் 19 தமிழர்களும், 06 சிங்களவர்களும் (இதில் ஒருவர் பிக்கு), வியட்நாம் பிக்குனி, ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, அஸ்திரேலியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒருவர் என மொத்தம் 32 பேர் கலந்துக் கொண்டனர்.

இப்பயிற்சி நெறியில் கலந்துக் கொண்ட தமிழர்கள் மாத்தளை, நுவரெலியா, கொழும்பு, வவுனியா, ஹோமாகம மற்றும் யாழ்ப்பாணம் என இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசம், நம்பிக்கை, வயது மற்றும் கலாசாரம் கடந்து உலகம் முழுவதிலிருந்தும் வந்திருந்த மக்கள் இந்த 10 நாள் பயிற்சி வகுப்பின் வழியே தம்ம நதியில் முதன்முறையாக மூழ்கி எழுந்தனர். பயிற்சியின் முடிவில் அளவற்ற மகிழ்ச்சியை அவர்களிடையே பார்க்க முடிந்தது.

டுபாய் நாட்டை சேர்ந்த பெண் தியானி ஒருவர் புத்தரின் மத பிரிவினையற்ற, அறிவியல்பூர்வமான போதனையால் பெரிதும் ஈர்க்கப்பட்டு தன்னுடைய நாட்டில் இப்பயிற்சி முகாமை ஒருங்கிணைக்கும் ஆர்வம் கொண்டார். சாயாஜி உ பா கின்னின் பாரம்பரியத்தில் எச். என் கோயங்காவினால் பயிற்றுவிக்கப்படும் விபஸ்ஸனா தியானம் ஓர் இல்லறவாசி தம்மதத்தை சரியாகப் புரிந்துக் கொண்டு பயிற்சி செய்ய மிகவும் உகந்த ஒரு வழியாகும். புத்தர் தான் பயிற்சி செய்து பிறருக்கும் பரப்புரை செய்த தர்மமானது ஒரு உலகலாவிய இயற்கையின் நியதி என்பதால் எந்த மதம், சாதி, வயது, வர்க்கம், நம்பிக்கை மற்றும் எத்தேசத்தை சேர்ந்தவர்களும் தடையில்லாமல் இந்த கலையைக் கற்று தனது மனதை தூய்மைப்படுத்திக் கொண்டு புத்தரின் கனவில் வந்த வெள்ளை நிறப் பறவைகள் போல் வாழ முடியும்.

இந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற சிலரின் அனுபவப் பகிர்வுகளை கீழே காணலாம்.

### டி.அர்ஷாத்

எமது வாழ்க்கையில் நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் துன்பத்திலேயே இருக்கிறோம். எல்லோரும் அதிலிருந்து வெளியே வர வேண்டும் என்பது எனது ஆசை. ஆனால், எப்போது வருவது என்பது தெரிவதில்லை. அதற்கு சிறந்த ஒரு போதனையே விபஸ்ஸனா தியான நெறியாகும். இன்று என்னை இந்த துன்பத்திலிருந்து வெளியே கொண்டு வந்ததை போல கண்டிப்பாக உங்களையும் கொண்டு வரும். அனைவரும் இதனை சரியான முறையில் கற்று வாழ்வில் சிறப்புடனும், நிம்மதியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.

### அருட்சகோதரி அகிலா (யாழ்ப்பாணம்)

இந்த பத்து நாட்கள் நான் சிந்தித்துப் பார்க்கையில் இத்தியான நெறியானது எனக்கு கிடைத்த வரம் என்றுதான் சொல்வேன். என் வாழ்வை மாற்றி, நான் யார் என்பதைக் கண்டு கொள்வதுடன், என் வாழ்வைப் புனிதப்படுத்தியது. என் உணர்வுகளுக்கு விழிப்பாய் இருக்கவும் எனது மனதை அழுக்குகளிலிருந்து தூய்மைப்படுத்தவும், எனது மனதைச் சமநிலைப்படுத்தவும் கிடைத்த வரப்பிரசாதமே அத்தியான நெறியாகும். இப்பொழுது என் உள்ளத்தில் இருப்பது அன்பு, கனிவு, இரக்கம், மகிழ்ச்சி மற்றும் அமைதியே ஆகும். இவை அனைத்தையும் நான் ஒவ்வொரு நாளும் வளர்த்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் இதனை பகிர்ந்து கொள்ளவுமே இத்தியானம் என்னை உருமாற்றியது. நான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களுக்கும் பெற்றுத்தர முயற்சி செய்வேன்,

### அருட்சகோதரி மர்லின் ரஃபேல்

முதலாவதாக தங்களின் அக்கறை மற்றும் அன்பான வரவேற்பு அனைத்திற்கும் மிக்க நன்றி. இந்த 10 நாட்கள் விபஸ்ஸனா முகாம் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. நான் இத் தியான நெறியின் மூலமாக அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொண்டேன். உள் அமைதி, உடல் வழிகளிலிருந்து விடுபடுதல், மனநிறைவு, உள் மகிழ்ச்சி பற்றுதல்களிலிருந்து விடுபட்டதுடன் நிலையாமையைப் புரிந்து கொண்டது. கற்பிப்பதில் ஆசிரியர்களின் சகிப்புத்தன்மை மிகவும் பாராட்டுதல்களுக்குரியது. நான் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். என் பரிந்துரை, நான் ஒரு கத்தோலிக்க கன்னியாஸ்திரி. ஆனால், எனக்கு சிறப்பு கவனிப்புகள் எதுவும் தேவையில்லை. நான் மற்ற மாணவர்களில் ஒருவராக கருதப்பட விரும்புகிறேன். உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுப்பாட்டிற்கும் நிர்வாகம், சேவகர்களுக்கும் மிகவும் சிறப்பான நன்றி. உங்கள் பயணத்தில் தம்மத்தின் ஆசிகள் உங்களுடன் வரட்டும்.

### சுபுனியின் (கொழும்பு)

மூன்று இரத்தினங்கள் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிக்கட்டும். நான் தற்செயலாக இம்முகாமைப் பற்றி அறிந்தவுடன் பங்கேற்க வேண்டும் என்ற தீவிரமான உறுதியுடன் இருந்தேன். நான் இந்த பாதையில் நுழைவது வாழ்நாள் அனுபவமாக இருந்தது. ஆசிரியர்கள் மிகவும் திறமையானவர்களாக இருந்தனர். எனக்கு ஒற்றைத் தலைவலி இருந்தப்போது அவர் எனக்கு ஒரு சரிப்படுத்தப்பட்ட அட்டவணையைக் கொடுத்தார். நான் அதற்கு நன்றி உள்ளவளாக இருக்கிறேன். மரியோ, சமன் மற்றும் அனுலா ஆகியோர் மிகவும் அன்பானவர்கள், அவர்களின் கருணைக்கு நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்.

### கீதா

இத்தியான பயிற்சி நெறி மிகவும் நன்றாக இருந்தது. இச்சேவையானது எமது நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியம். உங்களின் உதவிக்கு நன்றி.

விபஸ்ஸனா தியான நெறியில் பங்கேற்றவர்களின் அனுபவப் பூர்வமான பதிவுகள்

### எம்.விஜிதா

நான் முதன்முறையாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்றேன். புத்தகத்தின் மூலம் விபஸ்ஸனா தியானத்தைப் பற்றி நான் அதிகம் கற்றுக் கொண்டேன் என்றாலும், நான் இதற்கு முன்பு அதிகம் பயிற்சி செய்யவில்லை. இந்த 10 நாட்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தேன். விபஸ்ஸனாவின் மகத்துவத்தை முழுமையாக பெற்றுக் கொண்டேன். மக்களை மாற்ற பல வழிகள் உள்ளன, அவற்றில் இந்நுட்பமானது மிகவும் சிறந்தது. அதுமட்டுமின்றி, தம்ம ஷோபாவின் சூழ்நிலையும் மிக சிறப்பாகவுள்ளது. அது என்னை வளர்க்க உதவியது. அனைத்து நிர்வாக குழுவும் மிக மரியாதையுடன் சிறந்த பயனைப்பெற எங்களுக்காக தங்கள் சேவையை செய்கிறார்கள், அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்.

### இராமரூபன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

தம்ம ஷோபா மையத்தில் ஒக்டோபர் 01 முதல் 12 வரை நான் பங்கேற்ற விபஸ்ஸனா முகாம் எனக்கு பல விடயங்களைக் கற்றுக் கொடுத்தது. நேரத்திற்கு விழித்தெழுவது, நிமிட நேரத்திற்குச் சரியாகச் செயல்படுவது, அமைதியாக அமர்ந்து மூச்சையும் உடலையும் பற்றற்று கவனத்துடன் பார்ப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம். இது உண்மையில் மற்றுமொரு உண்மையை வெளிப்படுத்தியது இல்லையெனில் நான் உணர்ந்திருக்க மாட்டேன். அம்மையத்தினால் வழங்கப்பட்ட உணவு சிறந்ததாகவும் ஊட்டமளிப்பதாகவும் இருந்தது. இது ஒரு பயிற்சியாளருக்கு மிகவும் உகந்தது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் டிசம்பர் 05 முதல் 16 வரை யாழ்ப்பாண மாவட்ட பண்டதரிப்பு மண்டபத்தில் விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

குருஜி எஸ்.என்.கோயங்காவின் வழிவந்த தியான ஆசிரியர்கள் மோகன், இராமசந்திரன், ஜானகி சுப்பிரமணியம் மற்றும் சிறுவர்களுக்கான தியான ஆசிரியர்களான பாலசந்திரன் கிருஷ்ணமூர்த்தி, சரவணன் செல்வராஜ், சத்தியவாணி முருகன் ஆகியோர் ஒன்றிணைந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இப்பயிற்சி நெறியை நடத்துகின்றனர்.





# ஆனந்த அனுபவம்



கேணிப்பித்தன்

அவர் இருதலைக்கொள்ளி எறும்பாகித் தவித்தார். வாழும்போது மகிழ்ச்சியைத் தவிர வேறெதையும் அவர் காணவில்லை. கணவனினின் குணாம்சங்களைப் புரிந்து அதற்கேற்பத் தன்னைப் பக்குவப்படுத்தி இருந்தாள் மனைவி அன்புமலர். அவருக்குக் கிடைத்த பொக்கிஷம். இனிய தம்பதியினர். அவரின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சியாக ஏற்றுக் கைப்பிடித்தாள். மலரவன் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். நடந்தும், சைக்கிளிலும் பாடசாலைக்குச் சென்று வந்து கொண்டிருந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குறைந்த சம்பளம். என்றாலும் சமாளிக்கக் கற்றுக் கொண்டார். மேலும், சொந்தக் கிராமத்தைச் சொர்க்கமாக்கும் திட்டத்தை வீட்டுத்தோட்டச் செய்கைத் திட்டமாக்கி அதனைப் போட்டியாக செயற்படுத்தினார். பிள்ளைகள் சுறுசுறுப்பாக இயங்கினார்கள். அன்று மலரவன் பரபரப்பாக இருந்தார். மேற்கொண்டு படிப்பதா, முடியுமா? சமாளிக்கலாமா? யோசனையில் ஆழ்ந்திருந்தார். இப்படி என்ன யோசனை அவருக்கு? பக்கத்தில் வந்து விசாரித்தாள்.

‘மேல் வகுப்பு மாணவருக்கு கற்பிக்கும் திறனை வளர்த்தெடுக்கும் முயர்ச்சியில் ஈடுபட யோசிக்கிறேன்’ என்றார்.

‘அதைப்பற்றித்தான் நானும் யோசித்தேன். உங்கட பேருக்குப்பின்னால் ஒரு பி.ஏ பட்டம் கிடைத்தால் எனக்குப் பெருமைதானே’?

அதனை அவர் எதிர்பார்க்கவே இல்லை. அப்படியே உறைந்து போனார்.

‘மலர்! உனனைப் பற்றியே என் மனதில் கவலை. நான் படிக்க வெளியூர் சென்றால் எப்படிக் குடும்பத்தைச் சமாளிப்பாய்? ‘நீங்க ஏன் அதைப்பற்றி எல்லாம் இப்ப யோசிக்கிறீங்க, முதலில் ஏ.எல் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்க’ மலர் தொடக்கி வைத்தாள்.

மலரவன் நெகிழ்ந்து போனார். பாடசாலையில் கற்பிப்பதும், பகல் உணவின்பின் சற்று ஓய்வும், பின்னர் மேலதிகமாகப் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதும், முடிந்ததும் மண்வெட்டியுடன் தோட்டத்தில் வேலை செய்வதும் எனக் கஷ்டப்பட்டு உழைத்தார். குளித்து அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் மேல் வகுப்பு மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்க ஆயத்தப்படுத்துவதுமாக சுறுசுறுப்பாக இயங்கினார்.

தோட்டத்தில் கச்சான், சோளன், இடையிடையே மரவெள்ளியையும் பயிரிட்டிருந்தார். மழை தூறத் தொடங்கியதும் நிலத்தைக் கீறி முளைகள் வெளிவரத் தொடங்கின. மேரிமலர் தனது கணவனின் விடாமுயற்சிக்கு உந்து சகதியாளாள். மாணவர்கள் உயர்தரப் பரீட்சை எடுத்தார்கள். மலரவன் அதே பரீட்சையை வேறு ஒரு நிலையத்தில் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகத் தோற்றினார். அவர் பரீட்சை எழுதியது யாருக்கும் தெரியாது. அவருக்கு மனதில் ஒரு அச்சம் இருந்தது. மாணவர்களும் பரீட்சை எடுக்கிறார்கள். தானும் அதே பரீட்சையை எடுப்பதால் தான் சித்தியடையாது விட்டால்.....? பரவாயில்லை. மாணவர்கள் சித்தியடைந்தால் அதுதான் வெற்றி. அந்தச் சந்தோசமே போதும். பரீட்சை முடிந்து வீட்டுக்கு வந்தார். மனைவிக்கு மட்டுந்தான் தெரியும்.

பாடசாலைகள் தொடங்கினால் நாடு எங்கிலும் ஒரே கலகலப்புதான். காலையில் வீதிகள் எங்கும் வெள்ளைக் கோலம் போட்டதுபோல் இருக்கும். பாடசாலையில் நாட்கள் விரைந்தன. உயர்தரப் பரீட்சை பெறுபேறு பாடசாலைக்கு வந்துவிட்டது.

பரீட்சையில் தனது மாணவர்கள் திறமையாகச் சித்தியடைந்துள்ளதை எண்ணி மகிழ்ந்தார். அதேபோல் அவர் மனதில் அமைதியற்ற நிலை தோன்றி அவரை வாட்டியது. பாடசாலைகளுக்கே முதலில் பெறுபேறு கிடைக்கும். அந்தப் பாடசாலையில் மலரவனே அதிபராகச் செயற்பட்டார். பயிற்றப்பட்ட பின் ஐந்து வருட சேவை முடித்தவர்கள் அதிபருக்கான போட்டிப் பரீட்சை எடுக்கலாம். மலரவன் அப்பரீட்சைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தி சித்தியடைந்தார். இன்று அப்பாடசாலையின் அதிபராகத் திறமையாக நடத்திச் செல்கிறார். வழமைபோல் பாடம் நடத்திக் கொண்டிந்தார். தபால்காரர் கடிதங்களைக் கொடுத்துச் சென்றார். கடிதங்களை ஒரு ஆசிரியர் வாங்கி அதிபரின் மேசைமேல் வைத்து விட்டார். அது இடைவேளைக்கான நேரம். அதிபர் அலுவலக்கத்தினுள் வந்தார். கடிதங்களைத் தரம் பிரித்து அலுவலகக் கடிதங்களை வேறுபடுத்தி உரிய கோவைகளில் திணித்தார். தனக்கு வந்த கடிதத்தை தனிமையில் பிரித்தார். அது தான் எடுத்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுதான். அதனை மனைவி மேரிமலரிடம் சொல்வதற்காக எழுந்து சைக்கிளில் விரைந்தார்.

பாடசாலைக்குச் சென்றால் ஏதும் அவசரம் என்றால் மட்டுமே வீடு வருவார். வீட்டில் மேரிமலர் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார். எங்கிருந்து வந்தது அவருக்கு அந்தத் தைரியம். அப்படியே மனைவியை அலக்காகத் தூக்கிக் கொண்டாடினார். ‘மலர் உனது ஊக்கத்தால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். பல்கலைக்கழகம் கிடைக்கும். நான் படிக்கச் சென்றால் எப்படிக் குடும்பததைக் காப்பாற்றுவாய்’? அவர் கண்கள் குளமாயின.

‘என்னங்க நீங்க. இதற்காகத்தானே இவ்வளவு காலமும் காத்திருந்தேன். உங்கட பேருக்குப் பின்னால் பி.ஏ. பட்டம் அடையாளமாக பிரகாசிக்க வேண்டும். அதற்காக நான் எதையும் எதிர்கொள்ளத் தயாராகி விட்டேன். எப்ப பல்கலைக்கழகத்தில் இருந்து கடிதம் வரும்’?

மனைவியின் பதில் மலரவனைத் திருப்திப் படுத்தினாலும் அவர் உள்ளத்தில் கவலையை ஊன்றிவிட்டது. யாவுமாகி விஸ்வரூபமாய் நிறைந்திருந்தாள். மனைவி வெறும் போகப்பொருள் என்ற கருத்து எங்கோ மறைந்து விட்டது.

ஆண் பாதி, பெண்பாதியாக விளங்குவதாக ஐதீகம். அதனை சிவனும், சக்தியும் என அழைப்பார்கள். நமது உடலின் அமைப்பும் அவ்வாறே உள்ளது. வலப்பும் தூய்மையான செவ்விரத்தம் ஓடுகிறது. இடப்பக்கமாக நீலநிறமாக ஓடுகிறது. இதயம் சுத்திகரிக்கும் இயந்திரமாக இயங்குகிறது. இந்த இதயம் இயங்கும் வரைதானே எல்லா ஆட்டமும்.

மலரவன் மனதில் தத்துவம் உருண்டோடியது. மனைவி கொடுத்த தேநீரைக் குடித்தார். அப்படியே பாடசாலைக்குச் சென்றார். தான் பல்கலைக்கழகம் சென்றால் பாடசாலையை நடத்த அதிபர் வேண்டும். அதற்குரிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார். பாடசாலையில் இருந்து பரீட்சை எடுத்தவர்களில் 15 பேர்களில் 13 பேருக்கு யாழ். பல்கலைக்கழகம் கிடைத்துவிட்டது. மற்ற இருவருக்கும் கல்வியியல் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது. மலரவனுக்கு பேராதனை பல்கலைக்கழகம் கிடைத்திருந்தது.


‘நீ என்னவாக ஆகவேண்டும் என்று எண்ணிச் செயல்படுகிறாயோ அப்படியே ஆகுவாய்’ என்று விவேகானந்தர் கூறினார். கல்வி அமைச்சின் ஆலோசனையின் பேரில் கண்டிக்கு இடமாற்றம் பெற்று பாடசாலை ஒன்றில் கடமையேற்றார். இடமாற்றத்தில் சென்றுவிட்டார் என்றே ஊரார். உரிய விண்ணப்படிவத்தை நிரப்பி இரண்டு வருடக்கடமை லீவுக்கு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார். கற்பித்தலை நன்றாகவே செய்தார். நல்ல நண்பர்களையும் பேராசியரியர்களின் அன்பையும் தேடிக்கொண்டார். விடுமுறை நாட்களில் பல்கலைக்கழகப். பேராசிரியர்களையும், பல்கலைக்கழக மாணவ நண்பர்களையும் பாடசாலைக்கு வந்து கற்பித்தலில் உதவினார்கள். இது ஒருபுதிய அணுகு முறையாகும்.

மலரவன் கற்பித்த பாடசாலை மிகப்பின்தங்கிய பெருந்தோட்டப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை. ஒரு வசதியும் இல்லாத பாடசாலை. ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவியது. இந்த நெருக்கடியான நிலையில் மலரவன் துவண்டு போனார். உயர்கல்வியைத் தொடரும், அதேவேளை பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியிலும் கவனம் செலுத்தினார். க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் பத்துப் பிள்ளைகள் திறமையாகச் சித்தியடைந்தனர். பெற்றோரும், ஊர்சனங்களும் பாடசாலையில் கூடி அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டினார்கள். விடுமுறைக் காலம் வந்தது. மலவரனின் பட்டப் படிப்பும் முடிந்து பெறுபேறும் வந்து விட்டது. தான் பி.ஏ.பரீட்சையில் சித்தியடைந்ததை மனைவிக்கு அறிவித்தார். அது நவீன காலம் இல்லை. கடிதம் மூலம் செய்திகளை அனுப்புவார்கள். ஒரு கிழமையின் பின் மனைவியின் கடிதம் கிடைத்தது.

திரு.மலரவன், பி.ஏ. அதிபர், என முகவரி எழுதியிருந்தாள். முதன் முதல் எனது மனைவியே எனக்கு பி.ஏ. பட்டத்தை எழுதி அனுபவித்து அனுப்பியுள்ளாளே. அவள் கண்ட கனவை உண்மையாக்கி விட்டேன். அவர் அழுதேவிட்டார். கடிதத்தில் அவளின் ஆதங்கங்களைக் கொட்டி எழுதியிருந்தாள்.

பெண் ஒரு போகப் பொருளல்ல. சாதனை படைக்க வந்த சக்தி. அவளுடைய பாராட்டுக்கள் மலரவன் உள்ளத்தை நிரப்பியது. ஒரு பெண் நினைத்தால் சாதனை படைப்பாள். இந்த உலகத்தில் புளோறன்ஸ் நைரிங்கேள், ஹெலன் கெல்லர், அன்னை தெரேசா வரிசையில் எனது மலரையும் சேர்க்கலாம். எனது உயர்வுக்காகத் தன்னை உருக்கி தியாக தீபமாக விளங்குகிறாளே! அவரது கண்கள் கசிந்தன.

காசா






# போர் நிறுத்தத்தால் மகிழ்ந்த குழந்தைகள்



இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான தற்காலிக போர் நிறுத்தத்தினால் காசா கடற்கரையில் குடும்பத்துடன் குவிந்த குழந்தைகள் கடற்கரை அலையில் துள்ளி குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.

பங்களாதேசம்

## வைரலாகும் திருமண அழைப்பிதழ்


WEDDING INVITATION OF SANJANA AND IMON AT PSC CONVENTION HALL, MIRPUR 13, DHAKA

Sanjana Tabassum Sneha [1*] and Mahjib Hossain Imon [2]

[1] Daughter of Alamgir Hossain and Tahmina Akter
[2] Son of Dr. Md. Iqbal Hossain and Mahfuja Akter

Contact Number: +8801308960060, email: mahjibhossain9793@gmaill.com

**Abstract:** Marriage/Nikah in Islam is highly religious social contracts legally binding a man and a woman which bring rights and obligations to both parties and can only be successful when these are mutually respected and cherished. Marriage is a sacred and important institution that holds great significance in the lives of Muslims. It is considered a religious duty and a moral safeguard. Both the groom and the bride are to concern the marriage as their own free wills. The couple notes the significance invitation to witness their wedding is evident from the fact that it provides a healthy environment for the maintenance of cordial relation between the spouses, relatives, friends, and the reciprocal love between them. Accepting this invitation make the couple very happy to feel your presence on the best day of their life.

**Keywords:** Sanjana, Imon, Marriage, Invitation, Mirpur

**INTRODUCTION:** And we created you in Pairs (Quran 78:8). They are clothing for you and you are clothing for them (Quran 2:187)

**LOCATION:** The location of the wedding ceremony is at PSC Convention Hall, Mirpur 13, Dhaka. Dhaka is very popular for its traffic so start early.

*Figure 1: You willuse the Google Maps anyway*

**METHODOLOGY:** The wedding event will take place in the evening. In the name of Allah, the Most Beneficent and Merciful, we request the honor of your presence at the wedding ceremony.

*Table 1: Details of the Event*

| Table of the Event | |
|---|---|
| Time | 7 PM |
| Date | 14th October, 2023, Saturday |
| Venue | 1st Floor, PSC Convention Hall, Mirpur 13, Dhaka |

**CONCLUSION:** With new dreams, new hopes to achieve new horizons, and trusting someone without magic carpet ride, we are stepping into a new beginning of married life. Thank you for your encouragement, support, love, and du'a. Your presence for the ceremony will be appreciated.

**REFERENCE**

1. Surah An-Naba, Verse 8
2. Surah Al Baqarah, Verse 187

தம்பதியினர் தங்களுடைய திருமண அழைப்பிதழை வடிவமைக்க நிறைய வித்தியாசமான முறையில் யோசித்து வருகிறார்கள். திருமண அழைப்பிதழ் நகைச்சுவைக்காக சமூக வளைதளத்தில் வைரலாகுவதால் அனைவரும் வித்தியாசமாக வடிவமைக்க ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இதுபோன்ற புதுமையான மற்றும் நகைச்சுவையான திருமண அழைப்பிதழ்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி அனைவரையும் மகிழ்விக்கின்றன.

இந்நிலையில், பங்களாதேசத்தில் பி.எச்.டி பட்டிப்பை முடித்த ஜோடி ஒன்று தங்களுடைய திருமண அழைப்பிதழை ஆய்வுக் கட்டுரை போல் வடிவமைத்துள்ளது. தற்போது அந்த திருமண அழைப்பிதழ் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

நியூசிலாந்து

## புகைப்பிடித்தலுக்கு எதிரான சட்டம் நீக்கம்

நியூசிலாந்தில் கடந்த மாதம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சியை விட, கிறிஸ்டோபர் லக்சன் தலைமையிலான தேசிய கட்சி அதிக இடங்களை பெற்றது. அதன் பின்னர் 2 சிறிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

கூட்டணி கட்சிகளுடனான கூட்டணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட நிலையில், பதவியேற்பு விழாவில் கூட்டணியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கிறிஸ்டோபர் லக்சன் (வயது 53), நாட்டின் பிரதமராக பதவியேற்றுள்ளார்.

பின்னர் பேசிய பிரதமர் லக்சன், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு முதல் முன்னுரிமை கொடுக்க உள்ளதாக கூறினார்.

மேலும், முந்தைய அரசாங்கம் விதித்த புகையிலை கட்டுப்பாடுகளை, குறிப்பாக சிகரெட்டில் குறைந்த அளவிலான நிகோடின், சில்லறை விற்பனை குறைப்பு மற்றும் இளைஞர்கள் புகைப்பிடிக்க வாழ்நாள் தடை உள்ளிட்ட கட்டுப்பாடுகளை இரத்து செய்ய புதிய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.



**“ அரசு கொள்கை முடிவில் இருந்து பின்வாங்குவது நாட்டிற்கே அவமானம் என புகைப்பிடித்தல் எதிர்ப்பு அமைப்பான ஹெல்த் கோலிஷன் அடோடேரோவா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது**

இதுதொடர்பாக புகைப்பிடித்தல் எதிர்ப்பு அமைப்பான ஹெல்த் கோலிஷன் அடோடேரோவா வெளியிட்டுள்ள அறிக்கையில், “அரசு கொள்கை முடிவில் இருந்து பின்வாங்குவது நாட்டிற்கே அவமானம். இது பொது சுகாதாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். புகையிலை தொழிலுக்கு ஒரு பெரிய வெற்றியாக அமையும். மக்களின் உயிரிழப்புகளால் அந்த தொழிலின் இலாபம் அதிகரிக்கும்” என கூறியுள்ளது.

மணிப்பூர்

## இணைய தடை நீடிப்பு

மணிப்பூர் மாநிலத்தில் மெய்தி மற்றும் குகி இன மக்களுக்கு இடையே த மே மோதம் 3ஆம் திகதி கலவரம் வெடித்தது 7 மாதங்களுக்கு மேலாகியும் அங்கு இன்னும் வன்முறை ஓய்ந்தபாடில்லை.

இதனிடையே கலவரம் தொடர்பாக சமூகவலைத்தளங்களில் வதந்திகள் மற்றும் வெறுப்பு பேச்சுகள் பரப்பப்படுவதை தடுக்க மாநிலம் முழுவதும் மே 3ஆம் திகதி முதல் இணைய சேவை துண்டிக்கப்பட்டது. இந்த தடை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் மணிப்பூரில் இணைய சேவைக்கு விதிக்கப்பட்டிருந்த தடை செவ்வாய்க்கிழமை (28) இரவு முடிவுக்கு வந்த நிலையில் தடையை மேலும் 5 நாட்களுக்கு நீட்டித்து மணிப்பூர் அரசு உத்தரவிட்டுள்ளது. அதன் அடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி இரவு 7.45 மணி வரை இணைய சேவைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அரியானா

## துடைப்பத்துக்கு அஞ்சிய துப்பாக்கிதாரிகள்

அரியானா மாநிலத்தின் பிவானி மாவட்டத்தில் தெருவொன்றில் நின்று கொண்டிருந்த நபரை நோக்கி இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இருவர் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கியால் சுடும் சத்தத்தை கேட்டதும் எதிர் வீட்டில் இருந்த பெண்ணொருவர் கையில் துடைப்பக்கட்டையுடன் வேகமாக ஓடிவந்துள்ளனர்.

துப்பாக்கி வைத்திருந்தவர்களிடம் ஓடிவந்த அந்த பெண், அவர்களை நோக்கி துடைப்பக்கட்டையை வீசியுள்ளார். இதை கண்ட மர்ம நபர்கள் துப்பாக்கியுடன் அங்கிருந்து தப்பினர். இச் சம்பவங்கள் அங்கிருந்த சி.சி.டி.வி. கெமராவில் பதிவாகி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

இச்சம்பவத்தில் துப்பாக்கியால் சுடப்பட்ட நபர் குத்துச்சண்டை வீரர் ஒருவரின் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் என்றும் தெரியவந்துள்ளது.

மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில்

# இந்தியாவை வென்ற அவுஸ்திரேலியா



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், கௌகாத்தியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் மத்தியூ வேட், இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, ருத்துராஜ் கைகவாட்டின் ஆட்டமிழக்காத 123 (57), சூரியகுமார் யாதவ்வின் 39 (29), திலக் வர்மாவின் ஆட்டமிழக்காத 31 (24) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஜேஸன் பெஹ்றென்டோர்ஃப் 4-1-12-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 223 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, கிளென் மக்ஸ்வெல்லின் ஆட்டமிழக்காத 104 (48), ட்ரெவிஸ் ஹெட்டின் 35 (18), வேட்டின் ஆட்டமிழக்காத 28 (16) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ரவி பிஷ்னோய் 4-0-32-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இந்தியாவின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக

## தொடரவுள்ள ட்ராவிட்

இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ராகுல் ட்ராவிட் தொடரவுள்ளார். தனது பதவிக்காலத்தை நீடிக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அழைப்பை ஏற்றமையைத் தொடர்ந்தே தலைமைப் பயிற்றுவிப்பாளராக தொடரவுள்ளார்.

எவ்வளவு கால நீடிப்பு என சபை குறிப்பிடாதபோதும் குறைந்தது அடுத்தாண்டு இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் வரையாவது இந்த நீடிப்பு இருக்கும் என நம்பப்படுகிறது.





சிநேகபூர்வ போட்டியில்

## சலஞ்சஸ்ஸை வென்ற மில்லத்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கல்குடா சலஞ்சஸ் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ இருபதுக்கு-20 போட்டியில் வாழைச்சேனை, காவத்தமுனை மில்லத் விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சலஞ்சஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 134 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மில்லத் 19.1 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால்

## ரிஷியுதன் பாராட்டி கௌரவிப்பு

■ அஸ்ஹர் இப்றாஹீம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு இரண்டு கடினபந்து கிரிக்கெட் தொடரில், பத்தரமுல்ல ஜயவர்த்தன அணிக்கு எதிரான போட்டியில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்துவீசி



ஓட்டமெதுவும் கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனைபடைத்தார்.

இம்மாணவனை இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணியில் இணைந்து தனது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆதங்கத்தை பூர்த்தி செய்யும் வகையில், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால், சாதனை வீரனுக்கு நினைவுச் சின்னமும் கடினபந்து கிரிக்கெட் துறைக்கான சகல விளையாட்டு உபகரணங்களும் பண வவுச்சரும் வழங்கி வைக்கப்பட்டன.

சம்பியன்ஸ் லீக்:

## சமநிலையில் பரிஸ் ஸா ஜெர்மைன்-நியூகாசில் போட்டி




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சமப்படுத்தியது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றதோடு, நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் இஸாக் பெற்றிருந்தார்.

இதேவேளை, இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வென்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட், இறுதி 16 அணிகளுக்கான விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 30, நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.